**VICTORIA JUNIOR COLLEGE**
**JC2 PRELIMINARY EXAMINATION 2022**
**HIGHER 2**

---

**தமிழ் இலக்கியம்** **9577/1**
**TAMIL LANGUAGE AND LITERATURE**

**Paper 1**

**1 hr15 minutes**

Additional Materials: Answer Booklet

---

## தேர்வு எழுதுவோர்க்கான குறிப்புகள்

1. ஒவ்வொரு பிரிவின் தொடக்கத்திலும் உள்ள குறிப்புகளை நன்கு படித்துப்

   புரிந்துகொண்டு அவற்றின் படி வினாக்களுக்கு விடை எழுத வேண்டும்.

2. விடைகள் அனைத்தையும் கொடுக்கப்பட்டு விடைப்புத்தகத்தில் எழுத

   வேண்டும்.

3. கட்டுரை எழுதும் போது நீவீர் அகராதியைப்பயன்படுத்தலாம்

---

This document consists of 2 printed pages

[Turn over

More papers at www.testpapersfree.com

பின்வரும் தலைப்புகளில் ஏதேனும் ஒன்றினைப்பற்றிப் பற்றி 350 சொற்களுக்குக்

குறையாமல் ஒரு கட்டுரை வரைக.

**(35 மதிப்பெண்கள் )**

1. " நாம் நல்லவனாக மட்டும் இல்லாமல் வல்லவனாகவும் இருக்கவேண்டும்"


2. ஒரு நாட்டின் வளர்ச்சிக்கும் முன்னேற்றத்திற்கும் இயற்கை வளங்களே

   முக்கியமாகும் – கருத்துரைக்க.

3. நேர நிர்வாகம் ஒன்று தான் சிங்கப்பூரர்களின் மன உளைச்சலைப்

   போக்கும் வழியாகும் – விவாதிக்க

4. பின்வரும் படம் உன் மனதில் தோற்றுவிக்கும் வினாவையும் விடையையும் கட்டுரையாக வரைக.





More papers at www.testpapersfree.com

**VICTORIA JUNIOR COLLEGE**

**JC 2 PRELIMINARY EXAMINATION 2022**

**H2 Tamil Language and Literature** **9577/2**
**Paper 2**

1 hr 45 minutes

# தேர்வு எழுதுவோர்க்கான குறிப்புகள்

1. இவ்வினாத்தாளில் இரண்டு பிரிவுகள் உள்ளன.

2. “அ” பிரிவில் ஒரு பனுவலும் அதனையொட்டி ஐந்து வினாக்களும் இடம் பெற்றுள்ளன. “ஆ” பிரிவில் இரண்டு பனுவல்களும் அவற்றையொட்டி நான்கு வினாக்களும் இடம் பெற்றுள்ளன. இவ்விரு பனுவல்களையும் கருத்தூன்றிப்படித்து இவற்றையொட்டி அமைந்த வினாக்களுக்கள் அனைத்துக்கும் சொந்த நடையில் விடையெழுத வேண்டும்.

3. தேர்வாளர் கூறியதும் “ **START** “ என்பதைக் கிளிக் செய்து தேர்வெழுதத் தொடங்கவும்.

==============================================

This document consists of 7 **printed pages.** Questions are separately

[Turn over]



More papers at www.testpapersfree.com

## "ஆ" பிரிவு

**சுயவிடைக்கருத்தறிதல் (1)** **( 32 மதிப்பெண்கள் )**

பின்வரும் கட்டுரைப் பகுதியைக் கருத்தூன்றிப்படித்து, அதனடியிற் காணும்வினாக்களுக்கு உம் சொந்த நடையில் விடை தருக.

இன்றைய அமைப்பில் நாமும் ஒரு மனிதனாக வாழ்வதற்கு, நம்மை நாமே தயார்ப்படுத்திக் கொள்வது அவசியமாகிறது. காலம் காலமாக உயிர் வாழ்வதற்கு இரண்டு நடவடிக்கைகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வந்திருக்கின்றன. ஒன்றுஇருக்கின்றசூழ்நிலைக்கு ஏற்றவாறு மாற்றிக்கொள்ளுதல், மற்றொன்றுமாற்றிக்கொண்ட பிறகு இருப்பதை மேலும் சிறப்புடையதாக ஆக்கிக் கொள்ளுதல். வரலாற்றுக் காலத்திற்கு முன்பும் பரிணாமம் தொடர்ந்த காலத்திலும் தாவரங்களும் சரி, பிராணிகளும் சரி சூழ்நிலைக்குத் தங்களைச் சரிசெய்து கொண்டவை மட்டுமே வாழ்ந்திருக்கின்றன.

வெப்பநிலை, மண்வளம், வளர்ச்சிக்கான பிற தேவைகள் ஆகியவற்றுக்குத் தம்மைச் சரிசெய்து கொள்ள முடியாத தாவரங்கள் உயிர் வாழ முடியவில்லை. சரிசெய்து கொள்ள முடிந்தவை, உயிர் வாழ்வதற்குத் தேவையான முதற் படியில் அடி எடுத்து வைத்தன. மிருகங்களின் நிலையும் இதுதான். ஒரே சூழ்நிலையில் பல மிருக இனங்கள் ஒன்றாக வாழ வேண்டியிருந்தன. இந்த நிலையில் பிற மிருகங்களின் தாக்குதலில் இருந்து தப்பி ஓடுகின்ற திறமை பெற்றவைகளும், மற்றமிருகங்களை வெல்லக்கூடியவைகளும் அல்லது அமைதியாக இணைந்து வாழக் கற்றுக் கொண்டவைகளும் மட்டுமே உயிர் பிழைத்தன.

தம்மைச் சூழ்நிலைக்கு ஏற்றவாறு சரிசெய்துகொண்ட பிறகு தோன்றுகின்ற இரண்டாவது கட்டம், இருப்பதைத் தொடர்ந்து சிறப்புடையதாக ஆக்கிக் கொள்வதாகும். இது உயிர்வாழ்தலின் அடிப்படை விதியும் ஆகும். உயிர் வாழ்தல் என்பது, சரி செய்து



More papers at www.testpapersfree.com

கொள்வதைப் பொறுத்த விஷயம்மட்டுமல்ல; இருப்பதை மேலும் சிறப்பானதாக ஆக்கிக்கொண்டு போட்டியைச் சமாளிப்பதும் ஆகும். உதாரணமாக, ஓர் அழகிய சிறிய மலர், பருவகால சூழ்நிலைக்கு ஏற்பத் தன்னைச் சரிசெய்து கொள்ளும் ஆற்றல் பெற்றதாக இருக்கலாம். ஆனால் பெரிதாகவும், கனமாகவும், விரைந்தும் வளரக்கூடிய பிற தாவரங்களால் அமுக்கப்பட்டு அழிந்து போகலாம். ஆகவே அந்த மலர் உயிர் வாழ வேண்டுமானால் இவற்றைத் தாக்குப் பிடிக்கும் சக்தியை அது வளர்த்துக் கொள்வது அவசியமாகிறது.

உயிர் வாழ்வதற்குத் தேவையான முதல்நிலை, தன்னைச் சூழ்நிலைக்குச் சரிசெய்து கொள்வதாகும். உங்களின் குடும்பம், வசிக்கும் இடம், தொழில், வர்த்தகம் ஆகிய எதிலும் எந்தச் சமயத்திலும் நீங்கள் பொருத்தமானவராகவும் சரிசெய்து கொள்கின்றவராகவும் உங்களை வைத்துக் கொள்வது அவசியமாகிறது. உயிர்வாழ்தல் என்று சொல்கின்றபோது, உயிருடன் இருத்தல் அல்லது இறந்துபோதல் என்பது பொருளல்ல. சில சமயங்களில் அதுவும் நேரலாம். உயிர்வாழ்தல் என்பது பயனுடைய, மற்றவர்கள் ஏற்றுக்கொள்ளக்கூடிய இணக்கமான மனிதராக வாழ்வது என்பதுதான்.

முதலில் நீங்கள் மற்றவர்களுடன் ஒத்துப்போக வேண்டும். மற்றவர்கள் உங்களை ஏற்றுக்கொள்ளும்படியாக முதலில் நீங்கள் உங்களைச் சரிசெய்துகொள்ள வேண்டும். அது இணக்கமான சூழ்நிலையில் உங்களை வைக்கும். வேறுவிதமாக நீங்கள் நடந்து கொண்டால் உங்களை மற்றவர்கள் ஏற்க மாட்டார்கள். எதிர்ப்பைத்தான் சம்பாதித்துக் கொள்வீர்கள். தொல்லைகளை அறுவடை செய்வீர்கள். எதற்கும் ஒத்துப்போகாதவர்கள் மற்றவர்களின் கவனத்தைத் தங்கள்மீது திருப்புவதில் வெற்றி பெறலாமே தவிர, மற்றவர்களால் ஏற்றுக்கொள்ளப்படுகின்ற நிலையைப் பெற முடியாது.

சூழ்நிலைக்குச் சரிசெய்து கொள்ளப் பழகிக் கொள்ளுங்கள். நீங்கள் வாழுகின்ற சமுதாயம் அல்லது அமைப்பின் நடைமுறைக்குக்



More papers at www.testpapersfree.com

கட்டுப்படுங்கள். இவற்றைச் செய்த பிறகு உங்களிடம் உள்ளதை மேலும் சிறப்பானதாக ஆக்கிக்கொள்ளத் தொடர்ந்து முயலுங்கள்.

வினாக்கள்

Q1 தாவரங்கள் உயிர் வாழ்வதற்கு எவை அடிப்படையாக இருந்து வந்திருக்கின்றன?

(4 மதிப்பெண்கள்)

Q2 காலவோட்டத்தில் சில விலங்கினங்கள்மட்டும் தப்பிப் பிழைத்ததற்குக் கூறப்படும் காரணங்கள் யாவை?
(7 மதிப்பெண்கள்)

Q3 நாம் நமது திறமையை வளர்த்துக்கொள்வது அவசியம் என்பதைப் பூவின்மூலம் கட்டுரையாசிரியர் எவ்வாறு உணர்த்துகிறார்? (6 மதிப்பெண்கள்)

Q4 உண்மையிலேயே 'உயிர் வாழ்பவர்' என்று யார்? அவர்கள் மற்றவர்களுடன் ஒத்துப்போகாதபோது எத்தகைய விளைவுகள் ஏற்படும் ?

(7 மதிப்பெண்கள்)

**Q5** சொற்பொருள் ( 8 மதிப்பெண்கள் )

பின்வரும் சொற்கள் மேற்கண்ட கட்டுரைப் பகுதியில் இடம்பெற்றுள்ளன. அச்சொற்களின் பொருளை விடைத்தாளில் எழுதுக.

i) பரிணாமம்

ii) விதியும்

iii) சமயத்திலும்

iv) இணக்கமான

முற்றும்



More papers at www.testpapersfree.com

( அடுத்த பக்கம் பார்க்கவும் )

"ஆ" பிரிவு

சுயவிடைக்கருத்தறிதல் (2) (30 மதிப்பெண்கள் )

பின்வரும் இரண்டு பனுவல்களையும் கருத்தூன்றிப் படித்து, அவற்றின் அடியில் காணும் வினாக்களுக்கு உன் சொந்த நடையில் விடை எழுதுக.

<u>பனுவல் ஒன்று:</u>

<u>நண்பர்களே! வணக்கம்.</u>

காலம் மாற மாற மனிதனின் தேவைகளும் மாறிக்கொண்டே இருக்கின்றன. அதற்கேற்ப தேவைகளும் அதிகரித்து வருகின்றன. தொலைக்காட்சி, குளிர்சாதனப்பெட்டி, குளிரூட்டும் பெட்டி, கணினி, மற்றும் சில விட்டு உபயோகப்பொருட்கள் வாழ்க்கைக்கு மிகவும் அவசியமாகிவிட்டன. ஆனால், பணம் கொடுத்து வாங்கும் அளவிற்கு மக்கள் பலரிடம் கையிருப்பு இருப்பதில்லை. அவர்களுக்கு உதவிக்கரம் நீட்ட வந்தது தான் தவணை முறை . இந்தத்தவணை முறையினால் தான் பலரின் ஆசைகள், கனவுகள் நிறைவேறுகின்றன. இது நடுத்தர குடும்பங்களுக்குக்கிடைத்த ஒரு வரப்பிரசாதம் ஆகும். பொருட்களின் விலைக்கு உரிய பணத்தை நாம் உடனடியாகச் செலுத்திப் பெறாமல், மாதாமாதம் ஒரு குறிப்பிட்ட தொகையைச் சிறுகச்சிறுக கொடுப்பதாக ஒப்பந்தம் செய்து கொண்டு, முதல் தவணையிலேயே பொருளைப் பெற்றுக்கொள்வது தான் தவணைமுறை.



More papers at www.testpapersfree.com

ஆனால், "கூட்டிக்கழித்துப்பார்த்தால் கடைசியில் பொருளின் உண்மையான விலையை விட அதிகமான அளவிற்குப் பணம் கட்ட வேண்டுமே" என்று கணக்குப்போடலாம். ஆயினும் நாம் ஆசைப்பட்ட பொருளை வாங்க வேண்டும் என்றால் தவணைமுறைதானே கைகொடுக்கிறது! நீண்டகாலக்கடன் பெற்று வீடு வாங்குவோரெல்லாம் பணவீக்கத்தையும், வட்டிவிகிதத்தையும் பார்த்தால் சொந்த வீடு வாங்க முடியுமா? பல நவீன கருவிகளை முழு பணமும் செலுத்தி வாங்குவது என்பது பணக்காரர்களுக்கும் சுயத்தொழில் செய்வோருக்கும் பொருந்துமே தவிர சராசரி மாத ஊதியம் பெறுவோருக்கு நவீன பொருட்களை வாங்குவது பகற்கனவாகவே முடியும். நடுத்தர மக்களுக்கு எட்டாக்கனியாகவே அமையும்.

இந்தத் தவணை முறையில் குறுகிய காலத்தவணைமுறை, நீண்டகால தவணை முறை என்று இருவகைத் தவணைமுறைகள் உள்ளன. குறுகிய கால தவணைமுறையில் ஒரு பொருளின் விலையைக் கட்டி முடித்த பிறகு கடன் சுமையிலிருந்து மீள வாய்ப்பு உள்ளது.

## பனுவல் 2

நண்பரே ! வணக்கம்.

தவணைமுறையில் பொருட்களை விற்கும் வியாபாரிகளுக்கு இலாபத்தின் மீது தான் அக்கறை இருக்குமே தவிர ஏழை மக்கள் மீது இருக்காது. ஒரு தொலைக்காட்சிப்பெட்டியின் விலை ஆராயிரம் வெள்ளி என்று வைத்துக்கொள்வோம். நுகர்வோர் பலர் முழுப்பணமும் உடனே கொடுக்க இயலாத போது பத்துப்பதினைந்து தவணைகளில் பணத்தைச்செலுத்தலாம் என்று வியாபாரி கூறுவதாக வைத்துக் கொள்வோம் .

இவ்வாறு பலருக்கும் விற்கும்போது விலையையும் உயர்த்தி, தவணைக்காலத்தில் தன் பணத்திற்கு வட்டி கிடைக்குமாறும், கடைக்காரர்களும் வியாபாரிகளும் செயல்படுகின்றனர். அப்படித்தவணை முறையில் ஒழுங்காக பணம் கட்டாத மக்களை மிகவும் கேவலமாக நடத்துகின்றனர். வீடு புகுந்து பொருட்களை எடுத்துச்செல்கின்றனர். தவணை முறை என்ற ஆசை வார்த்தைக்கு



More papers at www.testpapersfree.com

மயங்கி ஏராளமாக வாங்குபவர்கள் வசதியற்றவர்கள் மட்டும் அல்ல; தேவையற்றவர்களும் வாங்குகின்றார்கள். மக்களிடம் பேராசை வளர்க்கப்படுகின்றது. மக்கள் அகலக்கால்கால் வைக்க எண்ணும் பேராசைக்கார்களாக உருவாக்கப்படுகின்றார்கள். சில நேரங்களில் தரமற்ற, போலிப்பொருள்களை தவணை தவணை என்ற ஆசை வார்த்தை ஜாலங்களால் மக்கள் தலையில் கட்டிவிடுகின்றனர்.

மக்கள் விரலுக்கு ஏற்ற விக்கத்தோடு வாழவேண்டும் என்று நம் முன்னோர் கூறியுள்ளனர். சில ஆண்டுகளுக்கு முன்பு அமெரிக்காவிலும், துபாயிலும் வாழும் மக்களும், வேலைக்குச் சென்றவர்களும் தவணை முறையில் பொருட்களை வாங்கிக்குவித்தனர். திடீரென்று பொருளியில் நெருக்கடி ஏற்பட்டபோது பலர் வேலையிழந்தனர். போதிய வருமானம் இல்லாத காரணத்தால் தவணை முறைக்குக் கட்ட வேண்டிய பணத்தைச் செலுத்த முடியாமல் விழிப்பிதுங்கி நின்றனர்.

அதனால் தவணைமுறையை ஒரு சூதாட்டம் என்றும் கூறலாம். ஆசையைப் பெருக்கி, உள்ளதையும் இழக்கவைக்கும் இத்தவணை முறையை ஒரு ஏமாற்று வித்தை என்றும் வருணிக்கலாம். "பேராசை பெரு நஷ்டம் " என்பது பழமொழி. இப்பழமொழி தவணைமுறையில் உள்ள மோசடிகளைப் பறைசாற்றுகின்றது. எந்த ஒரு செயலையும் மனிதன், பகுத்தறிவின் துணைகொண்டு ஆராய்ந்து செயல்பட வேண்டும் அவ்வாறு செயல்பட்டால் உலகின் எந்த நாட்டிலும் தவணைமுறை செயல்பட முடியுமா? இவ்வளவு வரவேற்புப் பெறுமா?

## வினாக்கள்:

**மின்னியல் தேர்வு- 2022**

**மாணவர்களே! கீழ்க்கண்ட வினாக்களுக்கு உரிய விடையை, உங்கள் கணினியில்**

**இந்தப்பனுவல் உள்ள பகுதியில், அதற்கு அருகே உள்ள வினாக்கள் உள்ள**

**பகுதியில் தான் நீங்கள் தட்டச்சுச் செய்ய வேண்டும்.**

**1.இலக்கணக்குறிப்பைக்கண்டறிக:**



More papers at www.testpapersfree.com

தவணை முறை என்ற ஆசை வார்த்தைக்கு மயங்கி ஏராளமாக வாங்குபவர்கள் வசதியற்ற, தேவையற்ற மக்களே! இம்முறை மூலம் மக்களிடம் பேராசையும் வளர்க்கப்படுகின்றது.

1. கொடுக்கப்பட்டுள்ள இலக்கணக்குறிப்புகளுக்கு ஏற்ப அருகில் உள்ள வாக்கியத்திலிருந்து சொற்களைத் தேர்ந்தெடுத்து எழுதுக. ( 6 மதிப்பெண்கள் )

அ. வினையாலணையும் பெயர்:

ஆ. பண்புத்தொகை:

இ. தெரிநிலைவினைமுற்று :

2. இத்தவணைமுறை நடுத்தரக் குடும்பங்களுக்குக்கிடைத்த நல்ல வாய்ப்பு என்று கூறலாமா? விவரிக்க ( 5 மதிப்பெண்கள் )

3.தவணைமுறையில் பொருட்களை வாங்குவோர் கடைக்காரர்களால் ஏமாற்றப்படுகின்றார்களா? விளக்குக (7 மதிப்பெண்கள் )

4. தவணைமுறையை ஒரு சூதாட்டம் என்கிறார் ஒரு கட்டுரையாளர். ஆனால், நடுத்தர மக்களுக்குப் பயன்படும் இம்முறையைப் பற்றிய உன் கருத்துகளை 140 சொற்களில் சுருக்கி வரைக.

( பதில் இப்பனுவல்களை ஒட்டியே இருக்க வேண்டும் ) (15 மதிப்பெண்கள் )

முற்றும்

==========================================================



More papers at www.testpapersfree.com

# VICTORIA JUNIOR COLLEGE
# JC2 PRELIMINARY EXAMINATION 2022
# HIGHER 2

தமிழ் இலக்கியம்
**TAMIL LANGUAGE AND LITERATURE** **9577/3**

**3 hrs**

Additional Materials: Answer Booklet 15/09/2022

தேர்வு எழுதுவோர்க்கான குறிப்புகள்

1. ஒவ்வொரு பிரிவின் தொடக்கத்திலும் உள்ள குறிப்புகளை நன்கு படித்துப்

   புரிந்துகொண்டு அவற்றின் படி வினாக்களுக்கு விடை எழுத வேண்டும்.

2. விடைகள் அனைத்தையும் கொடுக்கப்பட்டு விடைப்புத்தகத்தில் எழுத

   வேண்டும்.

3. விடை எழுதும் போது வினாக்களின் எண்ணைக் குறிக்க வேண்டும்

This document consists of 6 printed pages

(Turn over)

More papers at www.testpapersfree.com

முக்கியக்குறிப்புகள்

ஒவ்வொரு பிரிவிலிருந்தும் ஒரு வினாவிற்கு விடையெழுத வேண்டும். மொத்தம் நான்கு வினாக்களுக்கு விடையெழுத வேண்டும்.

"அ" பிரிவு

நாவல் / சிறுகதை

1. " சமுதாய வீதி " நாவலில் ஆண்கள் பெண்களை அடிமைகளாக, காமப்பொருளாகவே நடத்துகின்றனர் என்று கூறலாமா? விவரிக்க.

(அல்லது )

2. " எண்ணங்கள் நிலையானவை அல்ல " என்ற சிறுகதையின் தலைப்பு இக்கதையின் கருப்பொருளை உண்மையிலேயே வெளிப்படுத்துகின்றது. இக்கூற்று உண்மையா ? விவரிக்க.

"ஆ" பிரிவு

## கவிதை

3. "ஆட்டனத்தி ஆதிமந்தி" என்ற கவிதையில் நல்லடிக்கோனுக்கு கரிகாற்சோழன் துரோகம் செய்து விட்டார் என்று கூறலாமா? உனது கருத்தை விவரிக்க.

**(அல்லது)**

4. உமது பாடத்திட்டத்தில் உள்ள திருக்குறளில் ஏதேனும் 'ஆறு' திருக்குறளைத்
தேர்ந்தெடுத்து அந்தக்குறள் உன்னை ஏன் கவர்ந்தது என்பதை விவரிக்க. ( மூன்று
அதிகாரங்களிலும் தேர்ந்தெடுக்க வேண்டும் )



More papers at www.testpapersfree.com

( அடுத்த பக்கம் பார்க்கவும் )

## "இ" பிரிவு

### நாடகம்

5. சிங்கப்பூர் மாப்பிள்ளை நாடகம் , "ஏமாற்றாதே ஏமாறாதே " என்ற கருத்தை உணர்த்தும் வகையில் எழுதப்பட்டுள்ளது- கருத்துரைக்க

**(அல்லது )**

6. "ஊஞ்சல், சிங்கப்பூர்மாப்பிள்ளை" ஆகிய இவ்விரண்டு நாடகங்களும் பொறுப்பற்ற இந்தியப்பெற்றோர்களை வாசகர்களுக்கு வெளிப்படுத்துகின்றதா? விவரிக்க.

## " ஈ " பிரிவு

### இலக்கியத்திறனாய்வு

(பார்த்திராத பனுவல்கள்)

சிறுகதை :

7. பின்னிணைப்பு 1-இல் கொடுக்கப்பட்டுள்ள "நிலவின் அழுகை" என்னும் தலைப்பிலான சிறுகதையைப் படித்துத் திறனாய்வு நோக்கில் கதைக்கரு, பாத்திரப்படைப்பு, கதாசிரியர் உணர்த்த விரும்பும் கருத்துகள் ஆகியவற்றை விளக்கி எழுதுக.

( 25 மதிப்பெண்கள் )

( அல்லது )

8. பின்னிணைப்பு 2-இல் கொடுக்கப்பட்டுள்ள " வெற்றிப்பாதை " என்னும் தலைப்பிலான கவிதையைப் படித்து அதன் நயத்தை விளக்கி எழுதுக.



More papers at www.testpapersfree.com

கவிதையின் பாடுபொருள், பொருள் நயம், கற்பனை நயம், தொடை நயம் ஆகிய கூறுகளையொட்டி விடை அமைதல் வேண்டும்.

( அடுத்த பக்கம் பார்க்கவும் )

நிலவின் அழுகை ( பின்னிணைப்பு 1)

விட்டில்.....

அம்மா நா ஸ்கூல் கு போறேன் சாப்பாடு போடும்மா என்றாள் செல்லமணி

இதோ வரேண்டா கண்ணு ..என் செல்லம்ல ச்கூல்கு போயிட்டு வரேன்மா.

பள்ளியில்....

பசங்களா..சத்தம் போடாதீங்க...எல்லாரும் அமைதியா இருங்க அடுத்த வாரம் பெற்றோர் கூட்டம் இருக்கு எல்லாரும் உங்க அப்பா அம்மாவ அழைச்சிட்டு வாங்க சரியா ....

சரிங்க டீச்சர் ..மாணவர்கள்

ஒருவாரம் கழித்ததும் , விட்டில்...

அம்மா இன்னைக்கு ஸ்கூல்ல பெற்றோர்களுக்கான மீட்டிங் வைக்கிறாங்க ....அப்போ எல்லா மாணவர்களும் அப்பா அம்மா வ கூட்டிட்டு வரணும் னு.. சொல்றாங்க ..இப்பவாது அப்பா வருவாராம்மா ...?

இடியாக இடித்தது மகளின் கேள்வி ..கண்களில் கண்ணீர் பெருக்கெடுத்தது.. மடை திறந்த வெள்ளம் போல....

ஏம்மா அழறே...அப்பாதான் வெளிநாட்டுல இருக்கார்னு நீதன சொன்ன அடுத்தவாரம் வருவார்னு சொன்ன அதான் அப்பா வருவாரில்ல ..ஏன் அழரம்மா ...

இல்லடா .....ரொம்ப நாள் கழிச்சு வராரில்லா அதான் சரி நீ சாப்டு நீ ஸ்கூல் கு போ ...

வரேம்மா ...

பள்ளியில் ...ஆசிரியர் ....சரி எல்லாரும் அமைதியா பெஞ்ச்ல உக்காரங்க.... உங்களுக்கு போட்டி வைக்கப் போறேன் ...உங்களோட மனசுல என்னல்லாம் ஆசைகள் கனவுகள் இருக்குன்னு ஒரு போட்டி.... சரியா...?



More papers at www.testpapersfree.com

இந்தாங்க ஒவ்வொருத்தரும் பேப்பர் வாங்கிக்கங்க ...சீக்கிரமா ஒரு பக்கத்ல கடிதமோ, கட்டுரையோ, ,கதையோ ,கவிதையோ ஏதாவது உங்க மனசுல இருக்குறத எழுதுங்க ...சரியா....? சரிங்க டீச்சர்... அரைமணி நேரம் கழிந்தது அனைவரும் எழுதி முடித்தனர்..

எங்க எல்லாரும் ஒவ்வொருத்தரா வாசிங்க என்றார் டீச்சர்.

கண்மணி தன் பெற்றோருக்கு நல்லா படிச்சு டாக்டரா அவங்கள தன் கூட வைத்து காப்பதுவேன்னு சொன்னாள்.

பொன்மணி தன் அம்மா கூலி வேலை பார்த்து படிக்க வைத்து கஷ்டப் படறதை நினைத்து நான் ஆசிரியராகப் பணிபுரிந்து அம்மாவக் காப்பத்துவேன் என்றாள்

செல்லமணி மட்டும் தயங்கினாள் படிப்பதற்கு ...அவளை படிக்கச் சொன்னார் ஆசிரியர். அவள் பதிலுக்கு கண்களில் கண்ணீர் விட்டாள்.

ஆசிரியரே அதை வாங்கிப் படித்தார்...

அப்பாவுக்கு கடிதம் எழுதியிருந்தாள்

அன்புள்ள அப்பா வுக்கு ....நலமா ? அப்பா ...நான் நலம் ..நீங்க எப்போ வருவீங்கப்பா...? உங்களைப் பாக்கணும் ... ...உங்கள பார்த்து ரொம்ப நாள் ஆச்சுப்பா ..அம்மா.. நீ வெளிநாட்டிற்கு போனதாய் சொன்னாள் ...எனக்கு புரிந்துவிட்டது ..நீ எங்கு இருக்கிறாய் என்று ...பாட்டியிடம் கேட்டுத் தெரிஞ்சிகிட்டேன் ...

போதும்பா... எங்களைப் பிரிஞ்சது ...வாரம் வாரம் ஒரு முறையாவது வந்து எனக்கு குளிப்பாட்டி, சோறு ஊட்டி என்ன ஸ்கூல் ல்ல கொண்டுபோய் விடுங்கப்பா ...முன்ன மாதிரி கண்ணே..!மணியே !ன்னு முத்தம் கொடுத்து கொஞ்சுவீங்கலேப்பா ...பாலும் சோறும் ஊட்டி எனக்கு நிலா காட்டி நிறைய பாடுவீங்க... நிறைய கதை சொல்லுவீங்களேப்பா ...இப்போ நீங்க ஏன் அமைதியா இருக்கிறீங்க என்னைக் கூட எதிர்ல கண்டாலும் கண்டுக்காமப் போறீங்கப்பா ....பக்கத்ல அந்த புது அம்மா உங்கள திட்டுவாங்கலாப்பா....?

அம்மா தினம் வீட்டு வேலை செஞ்சு கஷ்டப் படுறாங்கப்பா ...நீங்க ஏன்பா அம்மாவ விட்டுட்டு அந்தம்மாவக் கூட்டிட்டுப் போனீங்க ...? அம்மா அழகாத்தானே இருக்காங்க...நல்லா பேசுறாங்க ..நல்லா சமைக்கிறாங்க



More papers at www.testpapersfree.com

நல்லா பாடுறாங்க ...அவங்கள் ஏன்பா விட்டுப் போன ? அந்தம்மா மட்டும் ?....எனக்குத் தெரியும்பா ...அவங்க உங்கள திட்டுறதும் சோறு போடாம உங்கள துரதுறதும் பாட்டி சொன்னாங்க ...வந்துருங்கப்பா எங்களோட அம்மா உங்கள எவ்வளவு அழகா பாத்துப்பாங்க ....அம்மா ஒரு வார்த்தை கூட புது அம்மாவைத் திட்ட மாட்டங்க...நீங்க வாரம் ஒருதடவையாது வந்தாப் போதும்னு அழராங்கப்பா ...எனக்கு ஸ்கூல் ல பெற்றோர் கூட்டம் இருக்கு அப்பவாது வாங்கப்பா ....நான் காத்திருக்கிறேன் அப்பா
இப்படிக்கு உங்கள் மகள் செல்லமணி
ஆசிரியரின் கண்களில் கண்ணீர்.... கடிதத்தைப் படித்ததும் அவளை வாரி அணைத்துக் கொண்டாள் அந்த " புது அம்மா " ஆசிரியரின் மனம் மாறியது.

(கவிதை அடுத்தபக்கம்)

## வெற்றிப்பாதை ( பின்னிணைப்பு 2 )

உழைப்பின் உயர்வே வெற்றியாகும் !
  உணர்ந்தால் நீயும் உயர்வடைவாய் !
பிழைக்கும் வழியும் தெரியாமல்
  பிறரைப் பழித்துப் பேசாதே !
தழைத்துச் சிறக்க வேண்டுமெனில்
  தளரா துழைக்கக் கற்றிடுவாய் !
குழையப் பேசும் மனிதரிடம்
  குறையை என்றும் சொல்லாதே !

வெற்றிப்பெற்ற மனிதரெல்லாம்
  வியர்வை சிந்திப் பெற்றார்கள் !
கற்றக் கல்விப் பயனாலே
  கனியாய்ப் பழகித் தெளிந்தார்கள்!
சுற்றம் போற்றி வாழ்ந்திட்டால்
  சூழும் எழுச்சிப் பெருகிடுமே
உற்றச்சொல்லால் இணைத்தடவே
  உவந்து பேசி மகிழ்வீரே !

திட்டம் போட்டு வாழ்ந்திட்டால்
  தீர்வு எளிதாய்க் கிடைத்திடுமே!
பட்டம் வானில் பறப்பதுபோல்
  பாரில் புகழைப் பெற்றிடவே!
வட்டம் போட்டு வாழ்ந்திட்டால்
  வளமாய் நலமாய் வாழ்ந்திடலாம்!
சட்டம் மனதில் போட்டிடுக



More papers at www.testpapersfree.com

சாதனைப் படைத்து மகிழ்ந்திடவே!

(கவிதை உதவி : கவிஞர் கோவிந்தராஜன் சுந்தரப்பெருமாள்கோவில், தஞ்சை)

==================================================================================================================================================

முற்றும்



More papers at www.testpapersfree.com

More papers at www.testpapersfree.com